**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**

MCOP No: 60/2022

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 11 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | அழகேசன் |
| த.பெ/க.பெ | பாலக்கவுண்டர் |
| கிராமம் | மேட்டுர் |
| மாவட்டம் | சேலம் |
| வயது | 56 |

**ம.சா. 1 நாள் 11.07.2025**

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1 | முதல் தகவல் அறிக்கை | மசாஆ 1 |
| 2 | மாதிரி வரைபடம் | மசாஆ 2 |

| | | |
|---|---|---|
| 3 | பார்வை மகசர் | மசாஆ 3 |
| 4 | காயச் சான்று | மசாஆ 4 |
| 5 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | மசாஆ 5 |
| 6 | குற்ற இறுதியறிக்கை | மசாஆ 6 |
| 7 | குற்றவியல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு | மசாஆ 7 |
| 8 | மருத்துவர் பரிந்துரை சீட்டுகள் | மசாஆ 8 |
| 9 | நுண்கதிர் படம் | மசாஆ 9 |
| 10 | மருத்துவ பரிசோதனை அறிக்கை | மசாஆ 10 |
| 11 | மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் | மசாஆ 11 |
| 12 | மருத்துவமனை கட்டண ரசீதுகள் ரூ.231626/- (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) | மசாஆ 12 |
| 13 | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் | மசாஆ 13 |
| 14 | 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 14 |
| 15 | 2 ம் எதிர்மனுதரரின் பதிவு சான்றிதழ் | மசாஆ 15 |

குறிப்பு : சாட்சிக்கு முகம், நெஞ்சு, விலா எலும்பு மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டதாக கூறுகிறார். நிற்பதிலும் நடப்பதிலும் சிரமம் இல்லை, சாட்சி நின்ற நிலையில் சாட்சியம் அளித்தார்.

<u>குறுக்கு விசாரணை (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன். இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை.இரு சக்கர வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், வாகனத்திற்கு காப்பீடும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நஷ்டஈடு பெறவேண்டி 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக

வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தலைக் கவசம் அணியவில்லை என்றால் சரி. நான் தலைக் கவசம் அணியாததால் தான் தலையில் காயம் பட்டது என்றால் சரியல்ல. இரு சக்கரவாகனத்தில் அபாயகரமான பொருளை எடுத்துச் சென்றதும் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. கட்டிட வேலைக்கு தொடர்பான பொருட்களை வாகனத்தில் எடுத்துச் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு செலுத்த பொறுப்பல்ல என்றால் சரியல்ல. எனது தொழில் , வருமானம் காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உடல் ரீதியாக எவ்வித பிரச்சினையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எவ்வித நிரந்தர ஊனமும் வருமான இழப்பும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது நான் வேலைக்குசெல்வதில்லை. நான் தற்போதும் வேலைக்கு சென்று வருகிறேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1,2 எதிர்மனுதாரர்கள் காப்பீட்டு விதிமீறல் ஏற்படுத்தியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் ஏற்றுக்

கொள்ளக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல. மருத்துவ கட்டணங்களை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS